முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1505

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**12.11.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. அறமாக வாழுகின்ற அரங்கனே
ஆற்றலாக செயல்படும் தேசிகனே
வரமாக உலகோர்க்கு வழங்கி
வையகத்தை காத்து வரும் குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்பிரமணியர் யானும்
அருளுவேன் ஞானஅறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 26ம் நாள், 12.11.2023, ஞாயிற்றுக்கிழமை)
வரமாக அரங்கன் உன்னுள்ளே யான்
வையகத்தை சக்தியூட்டி காத்துவர
3. வருகவே அரங்கன் நீ செய்யும்
வளமான செயல்கள் அத்துனையும் ஆறுமுகன் என் செயலப்பா
வணங்கி உன் திருவடி பற்றினால்
வையகத்தார்க்கு என்அருள் ஆசி தடையற கிட்டும்
4. கிட்டவே தர்மன் உன் தர்மத்தை உலகோர்
தடையற பல்வேறு கிளைகளாக்கி
உலகமெல்லாம் தர்மபலம் பெருக்கினால்
உன் நோக்கம் எளிதில் நிறைவேறும்
5. நிறைவேற உன்னோடு ஆறுமுகன் யான்
நிலவுலகில் மகாசக்தியாய் இணைந்து நிற்க
தடையற உலகோர் உன் தொடர்புகூட்டி
தக்கபடி ஞானம் பயின்று வந்தால்
6. வருகின்ற மக்கள் அனைவருக்கும்
வல்லமைபட என் அருள்ஆசி துணையாய் நின்று
தருகின்ற குணமும் தரணியை காக்கின்ற மனமும்
ஆற்றல்பட ஞானமாக ஆக்கமாக பெருகி

7. அரங்கன் உன்தீட்சையாலே அனைவருக்கும்
ஞானிகளாகும் வாய்ப்பு கிட்டும்
வாய்ப்பு தந்து ஆறுமுகன் யான் உலகோரை வழி நடத்தி
ஐயமற இந்த பேருலகில் ஞானிகள் ஆளும் வண்ணம்
8. ஆற்றல் மிக்க ஞானத்தலைமை உருவாக
ஆறுமுகன் யானே காரணமாய் இறங்கி
அவரவர்கள் காரிய வெற்றிக்கு வழி நடத்தி
பெருமை மிக்க ஞானஆட்சி படைப்பேன்
9. பேருலகை ஞானவழி வழி நடத்தி
ஞான லோகமாக மாற்றி
இந்த யுகமே ஞானயுகமாக்குவேன்
வழங்கிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–